# ONLINE PAYMENT



உங்கள் வங்கி Card இன் தகவல்களை உட்செலுத்திய பின்
செலுத்த வேண்டிய தொகை காட்டும் Button Click செய்யுங்கள்.




தகவல்களை உட்செலுத்திய பின்
இங்கே OTP Code உங்கள் தொலைபேசி இலக்கத்திற்கு குறும் செய்தியாக கிடைக்கப்பெறும்




சரியான முறையில் பணம் செலுத்தப்பட்டு இருந்தால் Payment Success என்று அறிவிப்பு
கிடைக்கப்பெறும்.




பணம் செலுத்திய ரசீது Receipt குறுஞ்செய்தி மூலம் உங்கள் தொலைபேசி இலக்கத்திற்கு கிடைக்கப்பெறும். மின்னஞ்சல் முகவரி வழங்கப்பட்டு இருந்தால் ரசீதின் முழுமையான நகல் ஒன்றையும் பெற்றுக்கொள்ள முடியும்.




உங்களால் செலுத்தப்பட்ட அனைத்து கட்டணங்களும் dashboard இல் காணப்படும் history யினுள்ளே பார்வையிட முடியும்.



- ஆதன வரி
- கடை கூலி
- உரிம கட்டணம்
- வணிக வரி அல்லது தொழில்துறை வரி

CAT20 Automation System

PAY.CAT2020.LK



## நிகழ்நிலை கட்டணம்

உள்ளூராட்சி அலுவலகத்தில் நீங்கள் பெற்றுக்கொள்ளும் பல்வேறு சேவைகளுக்கு நிகழ்நிலை மூலம் பணம் செலுத்தலாம். ஆதன வரி,
கடை கூலி, உரிம கட்டணம், வணிக வரி அல்லது தொழில்துறை வரி இவ்வாறான சேவைகளுக்கான கட்டணம் போன்று, மேலும் பல்வேறுபட்ட சேவைகளுக்கான கட்டணங்களையும் நிகழ்நிலை மூலம் கொடுப்பனவுகளை மேற்கொள்ள முடியும்.

### படி 1

ஆதனவரி, கடைகூலி, உரிம கட்டணம்
போன்றவைகளுக்கு மட்டும் உள்ளூராட்சி அலுவலகத்தில் உங்களுக்குரிய சொத்துகள் அல்லது சேவைகளுக்காக கட்டணங்களை நிகழ்நிலையில் (ஒன்லைன்) ஊடாக பெற்றுக்கொள்ளுவதற்காக முதலில் உங்களது தேசிய அடையாள அட்டை இலக்கம் மூலம் பதிவு செய்து கொள்ள வேண்டும். மேலே குறிப்பிட்ட கொடுப்பனவுகள் தவிர்ந்த ஏனைய கொடுப்பனவுகளுக்கு இவ்வாறு பதிவு செய்து கொள்ள வேண்டியதில்லை.




### படி 2

கணணி அல்லது உங்கள் (நவீன) கையடக்க தொலைபேசியில் **www.pay.cat2020.lk** என்ற இணையத்தளத்திற்குள் செல்வதன் மூலமும் அல்லது உள்ளூராட்சி அலுவலகத்திற்குரிய **www.sammanthurai.ps.gov.lk** இணையத்திலுள்ள **online payment** பகுதிக்கு செல்வதன் மூலமும் அங்கே காணப்படும் இடை முகத்தில் உங்கள் தேசிய அடையாள அட்டை இலக்கம் மற்றும் தொலைபேசி இலக்கம் ஆகியவைகளை உள்ளிட்டு கொள்ளுங்கள்.

ஒரு முறை மட்டும் வழங்கப்படும் சேவைகளுக்காக (ஆடர்களுக்கு) மற்றும் நானாவித வருமானங்களுக்கு (Online Booking , other miscellaneous income)ஆகியவைகளுக்கு உங்களது உள்ளூராட்சி அலுவலகத்தில் நீங்கள் முன்பாகவே பதிவு செய்து கொள்ளவில்லை எனில் இடைமுகத்தினுள்ளே காணப்படும் Sing up Click செய்து உங்கள் தகவல்களை உள்ளிட்டு பதிவு செய்துகொள்ளுங்கள்.

பின்னர் Sign In Click செய்து உங்கள் தேசிய அடையாள அட்டை இலக்கம் மற்றும் தொலைபேசி இலக்கம் ஆகியவைகளை உள்ளிட்டு கொள்ளுங்கள். அச்சந்தர்ப்பத்தில் உங்கள் தொலைபேசி இலக்கத்திற்கு குறும் செய்தியாக இரகசிய இலக்கம் கிடைக்கப்பெறும்

### படி 3

நீங்கள் பல உள்ளூராட்சி அலுவலகங்களில் சேவையை பெற்றுக்கொள்வீர்கள் என்றால் அவ்வுள்ளூராட்சி அலுவலகங்கள் அனைத்தும் இடை முகத்தில் பார்வையிடுவதற்கான வாய்ப்பு கிடைக்கிறது. பின்னர் நீங்கள் சேவையை பெற்றுக்கொள்ளும் உள்ளூராட்சி அலுவலகத்தை தெரிவு செய்ய Link இன் மீது Click செய்யவும்




உங்களால் தேர்வு செய்து கொள்ளப்பட்ட உள்ளூராட்சி அலுவலகங்களில் நிகழ்நிலை மூலம் பணம் செலுத்தக்கூடிய சேவைகள் பற்றிய தகவல்களை பார்வையிடக்கூடியதாக இருக்கும். அங்கே பணம் செலுத்துவதற்காக உரிய சேவையை தெரிவு செய்து கொள்ளவும்.







இங்கே குறிப்பிடப்படாத சேவைகள் தொடர்பாக பணம் செலுத்த வேண்டி இருப்பின் other payment டை click செய்வதன் மூலம் உள்ளூராட்சி அலுவலகத்தை தெரிவு செய்து பணத்தை செலுத்த முடியும்.

பணம் செலுத்துவதற்காக தெரிவு செய்யப்பட்ட சேவை தொடர்பான அனைத்து தகவல்களும் இங்கே காட்டப்படும். (செலுத்த வேண்டிய தொகை, சொத்தின் வகை, கழிவுகள் கொடுக்கப்படுமாயின் அதன் தகவல்கள்)
செலுத்த வேண்டிய தொகையை உட்செலுத்தி Pay Button ஐ click செய்யுங்கள்.